# Velakkari Naadagam Pesum Penniya Sinthanaigal

**Mrs. J. Devi**
*Ph.D. Research Scholar (Part–Time)*
*Department of Tamil, Pachaiyappa's College, Chennai*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2026**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358359

**Abstract**

*The play Velaikkari exposes the social injustices faced by a working-class domestic woman, including economic exploitation, denial of rights, sexual harassment, patriarchy, and class discrimination. The power-driven attitude of the upper class, and the consequent objectification of women's bodies and labor, form the central theme of the play. Through its female characters, the play foregrounds awareness against women's oppression, a spirit of resistance, and a sense of self-respect. At the same time, it critically examines the social mindset in which women themselves become adversaries to other women. Annadurai's reformist ideology, intertwined with feminist thought, strongly emphasizes the values of equality, human rights, and social justice.*

***Keywords :*** *Arignar Anna, Velaikkari,Drama, Denial of Rights, Upper-Class People, Lower-Class People, Class Discrimination, Patriarchy, Sexual Harassment, Feminism*

**References**

1. Dr. C. N. Annadurai – Velaikkari (Chennai–1)
2. Clara Zetkin – Women's Liberation Movements
3. A. Chandrakandha Muruganandam – New Age Women in Search of Liberation
4. Mariyammal – Feminism in Modern Tamil and English Novels
5. M. A. Sushila – Feminism and Dalitism in the Dalit Movement

# வேலைக்காரி நாடகம் பேசும் பெண்ணியச் சிந்தனைகள்

***திருமதி ஜெ. தேவி***
பகுதி நேர முனைவர்ப் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*வேலைகாரி நாடகம், கீழ்த்தட்டு சமூகத்தைச் சேர்ந்த வேலைக்காரி பெண் சந்திக்கும் பொருளாதார சுரண்டல், உரிமை மறுப்பு, பாலியல் சீண்டல், ஆணாதிக்கம் மற்றும் வர்க்க வேறுபாடு போன்ற சமூக அநீதிகளை வெளிப்படுத்துகிறது. மேல்தட்டு சமூகத்தின் அதிகார மனப்பாங்கும், அதனால் பெண்களின் உடலும் உழைப்பும் பொருளாக மாற்றப்படுவதும் நாடகத்தின் மையக் கருத்தாக அமைகிறது. பெண் கதாபாத்திரங்கள் வாயிலாக பெண்களின் அடக்குமுறைகளுக்கு எதிரான விழிப்புணர்வு, எதிர்ப்பு மனநிலை மற்றும் சுயமரியாதை உணர்வு முன்வைக்கப்படுகிறது. அதே நேரத்தில், பெண்ணுக்குப் பெண்ணே எதிரியாக மாறும் சமூக மனப்பாங்கும் விமர்சிக்கப்படுகிறது. அண்ணாவின் சீர்திருத்த சிந்தனைகள் பெண்ணியக் கருத்துகளுடன் இணைந்து, சமத்துவம், மனித உரிமை மற்றும் சமூக நீதி ஆகிய மதிப்புகளை வலியுறுத்துகின்றன.*
***முக்கியச் சொற்கள்:*** *அறிஞர் அண்ணா, வேலைக்காரி, நாடகம், உரிமை மறுப்பு மேல்தட்டு மக்கள், கீழ்த்தட்டு மக்கள், வர்க்க வேறுபாடு, ஆணாதிக்கம், பாலியல் சீண்டல், பெண்ணியம்.*

ஒரு நாடு முன்னேற்ற பாதையில் செல்லும்போது தனிநபர் வளர்ச்சியுடன் சமூக நலனும் சமநிலையுடன் இணைந்து இருந்தால்தான் அது சிறந்த வளர்ச்சியாக கருதப்படும். நல்ல சமுதாயத்தின் அடித்தளமே சமூகநீதி ஆகும். அதன் முக்கிய கோட்பாடு சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதாகும். சாதி, மதம், இனம், பாலினம் அல்லது பொருளாதார நிலை போன்ற காரணங்களால் மனிதனைப் பாகுபடுத்தாத சமுதாயமே முன்னேறிய சமுதாயமாகும். தமிழ்நாட்டில் அத்தகைய சமுதாயம் அமைய வேண்டும் என்று சிந்தித்த சிந்தனையாளர்களில் அறிஞர் அண்ணா தலை சிறந்தவராக விளங்கினார். அவர் சிந்தனைகள் எல்லாம் சமத்துவம், பகுத்தறிவு, சுயமரியாதை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

**பெண்களுக்கான அண்ணாவின் குரல்**

பெண் முன்னேற்றம் இல்லாமல் சமூகம் முன்னேற்றம் சாத்தியமில்லை என்பதை மனதில் கொண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து குரல் கொடுக்கலானார். பெண்களை இரண்டாம் நிலை குடிமக்களாக கருதும் எண்ணத்தை அவர் கடுமையாக எதிர்த்தார். கல்வி, வேலைவாய்ப்பு, சுயமரியாதை, உரிமைகள் ஆகிய அனைத்திலும் பெண்களுக்கு சம வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். அதற்கு அவர் கையாண்ட கருவிகள் மேடைப்பேச்சு மற்றும் இலக்கியங்கள் ஆகும். இவை இரண்டும் மக்களின் மனநிலையை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதமாக செயல்பட்டன. அவரின் மேடைப்பேச்சுகளில் எளிய மொழி, நகைச்சுவை, கேள்வி பதில் முறை, தர்க்கம் என பல வடிவங்களில் பல சிக்கலான சமூகப் பிரச்சினைகளை விளக்கினார். சாதி, ஒடுக்குமுறை, மூடநம்பிக்கை, பெண் அடக்கு முறை போன்ற சமூகத் தீமைகளை அவர் நேரடியாக கேள்விக்கு உள்ளாக்கினார்.

ஏன் என்ற கேள்வியை மக்களிடம் எழுப்பி அவர்களைச் சிந்திக்க வைப்பது அவரின் மேடைப்பேச்சியின் முக்கிய நோக்கமாக இருந்தது.

மேடைப்பேச்சுடன் கரம் கோர்த்தது அவரின் இலக்கிய படைப்புகள். அவர் எழுதிய கட்டுரைகள், நாடகங்கள், சிறுகதைகள், திரைக்கதைகள் அனைத்தும் சமூக கருத்துக்களை மையமாகக் கொண்டவை. இலக்கியம் என்பது பொழுது போக்கு மட்டுமல்ல. அது சமூகத்தை மாற்றும் சக்தி கொண்டது என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. அந்த அடிப்படையில் உருவானது தான் அண்ணாவின் வேலைக்காரி நாடகமாகும். இந்நாடகத்தின் மூலம் அண்ணா சமூகத்திற்கு கூற விரும்பிய பெண்ணியச் சிந்தனைகள் குறித்து ஆராய்வே கட்டுரையின் நோக்கமாகும்.

## அண்ணாவின் வேலைக்காரி

பெண்ணிய கோட்பாடுகள், உரிமைகள், சமத்துவம் பற்றிய கருத்துக்களால் விளைந்த பலன்கள் எல்லாம் கல்வி கற்ற, நகர்ப்புற, பொருளாதார வசதி உடைய மேல் தட்டு மக்களுக்கு எளிதில் கிடைத்து விடுகின்றன. அவை பெரும்பாலும் ஏழைகளுக்கு எட்டா கனியாக தான் இருக்கிறது என்பதனை "உழைக்கும் வர்க்க மகளிர்க்கு இதர வர்க்க மகளிர்க்கும் இடையில் சட்ட ரீதியான மற்றும் அரசியல் சீர்திருத்தங்களுக்கான கோரிக்கைகளில் பல பொதுவான அம்சங்கள் இருப்பினும் தீர்மானகரமான பொருளாதார நலன்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கிடையில் பொதுவான பின்னணி எதுவும் இல்லை.

உழைக்கும் மகளிர் விடுதலையானது அனைத்து வர்க்க மகளிர் சாதிக்கப்பட இன்றி உழைக்கும் வர்க்கத்தால் மட்டுமே சாதிக்கப்பட முடியும்" என கிளாரா ஜெட்கின் கூறுகிறார். மேல் தட்டு மக்கள் மட்டுமல்லாமல் வீட்டு வேலைக்காரி, விவசாயக் கூலி, கட்டிட தொழிலாளி போன்ற அடிமட்ட பெண்களின் குரலையும் உள்ளடக்க வேண்டும் என்ற சிந்தனையில் உருவானது தான் அறிஞர் அண்ணாவின் வேலைக்காரிநாடகம். **1947** ஆம் ஆண்டில் நிலவிய கீழ்தட்டு பெண்களின் வாழ்க்கைப் போராட்டங்கள் வாயிலாக பெண்ணியத்தின் உண்மையான வடிவத்தை அண்ணா வெளிப்படுத்தினார்.

## வர்க்க வேறுபாடு

தன் வீட்டில் அனைத்து வேலைகளையும் பார்க்கும் வேலைக்காரியைத் தாழ்வாக பார்ப்பது பணக்கார சமுதாயத்தின் பொதுவான போக்காக உள்ளது. அந்த சிந்தனையை மாற்றுவதற்காகவே அமிர்தம் என்னும் வேலைக்காரி கதாபாத் திரத்தைப் படைத்து நானும் ஒரு மனுஷிதான் எனக்கும் மரியாதை வேண்டும் என்று அவள் பேசும் குரல் சம உரிமையை வலியுறுத்தும் பெண்ணியப் போராட்டம் ஆகும். இந்நாடகத்தில் வரும் சரசா பணக்கார வீட்டில் வளரும் பெண். எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் தனக்கு தோன்றியதைப் பேசும் சுதந்திரத்தைப் பெற்றும் நடனமாடி மகிழ்ந்தும் மாதர் சங்கத்தில் இணைந்து சமூக சேவையாற்றுவது போல பாசாங்கு செய்து, அனைத்து சுதந்திரங்களையும் பெற்றவளாய் ஆனந்தமாக உலா வருகிறாள். நாடகம் முழுவதும் வாய்ப்பு கிடைக்கின்ற நேரங்களில் எல்லாம் வீட்டு வேலைக்காரியான அமிர்தத்தை வம்பு இழுத்து அதிகார தோரணையுடன் அவளை அடக்கி ஆனந்தம் அடைகிறாள். பணக்காரப் பெண் சரசாவும் வேலைக்காரி அமிர்த்தமும் ஒரே பாலினத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் ஒரே நிலைப்பாட்டில் நாடகத்தில் படைக்கப்படவில்லை.

வீட்டின் அதிகாரத்துடன் பணம் அனைத்தையும் ஆளும் என்ற சிந்தனையுடன் வேலைக்காரியை மனிதராக அல்ல கட்டுப்படுத்த வேண்டிய பொருளாகவே பார்க்கிறாள். ஏழைப் பெண்களை அடக்கி ஆள்வது பெண்ணிய விரோதம் அல்ல வரக்க அதிகாரமே. சரசா, அமிர்தத்தை அடக்கி ஆள்வது எல்லாம் வீட்டு ஒழுக்கம், மரியாதை, பெண் பண்பு போன்ற சொற்களால் நியாயப்படுத்துகிறாள். நாடகத்தின் தொடக்கத்திலேயே பணக்கார வீட்டில் சரசா ஆடல் பாடல் என்ற

உற்சாகத்துடன் வலம் வருகிறாள். அதே வயதுடைய வீட்டு வேலைக்காரி அமிர்தம் ஆனந்தமாக ஓடி வர, அதனை கண்ட சரசா "ஒரு வேலைக்காரிக்கு வேண்டிய அடக்க ஒடுக்கம் மற்றும் மரியாதை ஒன்று கிடையாது" என்று கூறி அவளை அடக்கி ஆள்கிறார்.

தன்னிடம் கேள்விக்குப் பதில் அளிக்கும் சாதாரண உரிமை கூட வேலைக்காரிக்கு வழங்கப்படுவதில்லை. அவர்கள் சிந்தித்து பதில் அளித்தால் தங்களை மதிக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தால் அவர்களுக்கு சிந்திக்க என்ன பேசும் வாய்ப்பை கூட வழங்கவில்லை. கணவனை வரவேற்க அத்தனை அழகுப்படுத்தி காத்திருக்கும் சரசாவிற்கு அமிர்தம் பூ கொண்டு வருகிறாள். அதற்கு சரசா அமிர்தத்தைப் பார்த்து "அவருக்கு இதுதான் பூவோ? என்ற சரசா கேட்ட கேள்விக்கு, அமிர்தம் இதுதாம்மா. நம்ம தோட்டத்திலே இது தானுங்கே இருக்குது" என்று பதில் கூறிய முடிப்பதற்குள் சரசா கழுதை வாயை மூடு! வரவர பேச்சு அதிகமாயில்ல வருது' என பேசி அவள் வாயை அடைக்கிறாள் சரசா. மேலும் அவளை அவமதிக்கும் விதமாக "இந்தா இதை சாப்பிடு (தின்று மிச்ச ஆப்பிள் பழத்தை எறிகிறாள்) அமிர்தம் விழிக்கிறாள், ஏண்டி விழிக்கிற எச்சிலா இருக்கிறது என்று பார்க்கிறாயா? ஒன்றுமில்லை நான் சாப்பிட்ட மிச்சம் அது. இந்த சமயத்தில் இதாவது கிடைத்தது என்று சந்தோஷப்படாம" என அவளை அவமரியாதையாக நடத்துகிறாள் சரசா.

"ஒரு பெண்ணின் சுயமரியாதை பாதிப்புக்குள்ளாகும் போது அவள் உள்ளம் குமுறுகிறார். அன்றைய பெண்கள் என்றால் பணிந்து போக வேண்டும் என்ற மாயைக்குள் சிக்கியிருந்தால் உள்ளுக்குள்ளேயே குமறி அழுதார்கள். இன்றைய பெண்களில் இந்நிலையிலிருந்து ஒரு வித மாற்றம் அனுகூலமாகத் தெரிகிறது. தனது தன்மானம் பாதிக்கப்படும் போது அவள் பொங்கி வெடிக்கிறாள். இவ்வாறு எழுச்சிக் கொள்ளும் பெண்களுக்குக் குடும்பத்திலும் சமூகத்திலுள்ள பெண்கள் கை கொடுக்க வேண்டும்" என்கிறார் சந்திரகாந்தா முருகானந்தம்.

பெண் முன்னேற்றத்திற்காக பாடுபடுவோம் என்று பேசும் பெண்ணியவாதிகள் சிலர் மேடையில் பேசும் பெண்ணியம் குறித்த சிந்தனைகளை எல்லாம் தங்களின் தனிப்பட்ட வாழ்க்கை அல்லது நடைமுறையில் கடைபிடிப்பதில்லை என்ற கருத்து சமூகத்தில் நிலவி வருகிறது. இவர்கள் பேசும் மேடைகள் மற்றும் படைப்புகளில் எல்லாம் ஒரு அரசியல் சமூக போராட்டமாக மேடையில் தெளிவாக கருத்துக்களை முன்வைத்து பேசி கைதட்டுகளைப் பெற்று விடலாம். ஆனால் அந்த கருத்துக்களை சமுதாயத்தில் சக மனிதர்களிடம் செயல்படுத்து வதில்லை. சரசா மேடையில் பேசுகிறார் "நாம் எல்லோரும் சமம். எல்லோரும் ஒன்று என்ற முறைப்படி தாழ்ந்த நிலையில் உள்ளவர்களை தகுந்த நிலையில் உயர்த்துவதற்கு நான் எப்பொழுதும் தொண்டு செய்வேன்" என மேடையில் பேசும் சரசா. வீட்டில் சக பெண்ணை ஒரு மனுஷியாக கூட பார்ப்பதில்லை. இதில் உங்களை உயர்த்த பாடுபடுவேன் என பேசும் பேச்சாளர்கள் மேடையில் பேசுவது ஒன்று செய்வது ஒன்று என்பதை முதல் காட்சியிலேயே நகைச்சுவையாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

### உரிமை மறுப்பும் ஆணாதிக்கமும்

பெண் என்பவள் எல்லா இடங்களிலும் உரிமை மறுப்பை எதிர்கொள்கிறாள். பணக்கார வீட்டில் பணிபுரியும் வேலைக்காரிக்கு வேலை செய்யும் இடத்திலும் அடக்குமுறைக்கு ஆளாகி, தனது வீட்டிற்கு வரும்போது அங்கும் அதே அடக்கு முறையில் ஒரு கருவியாக மாறுவது சமூக முரணாகும். அடக்குமுறை மேலிருந்து மட்டும் வருவதில்லை அது கீழ் மட்டத்தில் மீண்டும் உருவாக்கப்படுகிறது என்பதை காட்டுகிறது. தந்தை, கணவன், மகன் அல்லது குடும்பத்தில் உள்ள ஆண் சமுதாயத்தில் தங்களுக்கு கிடைக்காத அதிகாரத்தை வீட்டுக்குள் பெண்களின் மீது செலுத்துகின்றனர். இதனால் வெளியில் ஒடுக்கப்பட்ட ஆண் வீட்டிற்குள் ஒடுக்குபவனாக மாறுகிறான். வேலைக்காரி என்பவள் பொருளாதாரத்திற்காக வேலைக்குச் சென்றாலும் வீட்டுக்குள் ஆணாதிக்க அமைப்பை மாற்றாமல் ஏற்றுக் கொள்வதால்

பெண்களின் உரிமை தொடர்ந்து மறுக்கப்படுகிறது.

இதனை "பெண்களை அடிமைப்படுத்துவதில் குடும்ப நிறுவனம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது அது பெண்களுக்கு இரட்டை விலங்கு போட்டு வைத்திருக்கிறது. குடும்பம் பெண்களை சுரண்டி அடக்கி ஒடுக்குவது மட்டுமல்லாமல் குடும்பத்தின் மூலம் தான் பெண்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்ற நிலைமையையும் ஏற்படுத்தி வைத்திருக்கிறது" என மாரியம்மாள் கூறுகிறாள். வேலைக்காரி நாடகத்தில் அமிர்தத்திற்கு வயதான மாப்பிள்ளையை அவளின் அப்பா முடிவு செய்யும் போது அதனை அவளால் வீட்டில் மறுக்க போராடுகிறாள். அமிர்தத்தின் தந்தையிடம் வேதாச்சலம் முதலியார் அமிர்தத்தின் திருமண பேச்சுவார்த்தை விசாரிக்கும் போது அதற்கு அமிர்தத்தின் அப்பா "எனக்கு கொடுக்கிறதுக்கு இஷ்டம் தானுங்க ஆனா பொண்ணு தான் மாப்பிள்ளைக்கு வயசாயிடுத்து" என்று சொல்கிறாள். அதற்கு ஜமீன்தார் தானும் ஒரு அப்பா என்பதை மறந்து இதஎன்னடா ஊரிலே இல்லாத வழக்கம் என பொருந்தாமணத்தை செய்வதில் என்ன தவறு என்ற நோக்கில் அமிர்தத்தின் தந்தையிடம் கேள்வி கேட்கும் போது வர்க்க வேறுபாட்டை திறம்பட எடுத்துக்காட்டியுள்ளார்.

**பாலியல் சீண்டல்**

வேலைக்குச் செல்லும் பெண்கள் எல்லாம் சந்திக்கும் பிரச்சினைகளில் ஒன்று பாலியல் வன்கொடுமையாகும். அதிலும் வீட்டு வேலைக்கு செல்லும் பெண்கள் சந்திக்கும் பாலியல் சீண்டல் என்பது தனிப்பட்ட ஒழுக்க குறைபாடு அல்ல. வீட்டுக்குள் இருக்கும் ஆண் அதிகாரம் மற்றும் வர்க்க மேலாதிக்கம் ஆகியவற்றின் விளைவாக நிகழ்கிறது. இதற்கு எதிராக குரல் கொடுக்க முடியாத சூழலாக வேலைஇழப்பு, அவமானம், நம்பிக்கை இல்லாமை காரணமாக அமிர்தம் போன்ற வேலைக்கு செல்லும் பெண்களை மௌனத்தில் தள்ளுகிறது. மற்ற செயல்களில் ஏற்றத்தாழ்வு பார்க்கும் உயர்த்தட்டு மக்கள் பெண்களின் உடலில் பாலியல் சீண்டலில் இவ்வேறுபாட்டைப் பார்ப்பதில்லை. இதனை அண்ணா அமிர்தத்தை பரமானந்தம் தீண்டும் போது "கேவலம் நான் ஒரு வேலைக்காரி என்பதற்கு வேலைக்காரியா? பூவிற்றால் பூக்காரி, பிச்சை எடுத்தால் பிச்சைக்காரி, சிங்காரித்துக்கொண்டால் சிங்காரி, நீ வேலை செய்கிறாய் அதனால் வேலைக்காரி" என்று உரையாடும் உரையாடல் மூலம் மேல் தட்டு மக்களின் மனநிலையை படம்பிடித்துகாட்டுகிறார். இதனை "சமூக வீதியில் சஞ்சரிக்கும் பெண்ணைத் துன்பத்திற்கு உள்ளாக்கும் பாலியல் சீண்டல்களைத் துணிவோடு எதிர்கொள்ள அவள் உரம் பெற வேண்டுமென வற்புறுத்தும் பாரதிதாசனின் கீழ்காணும் பாடல் வரிகளும் பெண்ணிய நோக்கில் கவனத்திற்குரியன.

**தனித்து வரும்போது- கெட்ட**
**தறுதலையை கண் வைத்தால்**
**இனிக்க நலம் கூறு பெண்ணே**
**இல்லாவிடில் தாக்கு**
**உமியல்ல வலக்கை - தீயர்**

உயிரைக் குடிக்கும் உலக்கை என எம்.ஏ. சுசீலா எடுத்துரைக்கிறார். பெண்கள் காட்டு மௌனம் சமூகத்தின் குற்றமே என்பதை உணர்ந்த தன்னை சீண்டும் முதலாளியின் மருமகனிடம் அமிர்தம் பயப்படாமல் "நான் இந்த வீட்டில் வேலை செய்ய வந்தேன். விபச்சாரத்துக்கு வரவில்லை" என கூறுவதன் மூலம் தீண்டலுக்கு எதிராக தனது மௌனத்தை உடைக்க வேண்டும் என்று குரல் கொடுக்கிறார்.

இன்றைக்கு சில இடங்களில் வீட்டில் பெண்கள் கூட பெண்ணின் வலியை உணராமல் ஆணாதிக்கத்தை மறைமுகமாக ஆதரிக்கும் நிலையையும் அண்ணா சுட்டிக்காட்ட தவறவில்லை. கணவனின் செயலுக்காக அமிர்தத்தை திட்டம் சரசா "மூடுடி வாயை.. தடியாட்டமா இருந்துட்டு தளுக்கு மினுக்கு செய்தா ஆம்பளைக்கு கெட்ட எண்ணம் வராதாடி" என பெண்ணின் வலியை உணராமல் பெண்ணுக்கு பெண்ணே எதிராக இருப்பதை சொல்லவும் தவறவில்லை.

நாடகத்தில் வரும் அமிர்தம் என்னும் முதன்மை கதாபாத்திரத்தின் மூலம் அண்ணா

ஆணாதிக்கம், வர்க்க வேறுபாடு பெண்ணின் மௌனம் ஆகியவற்றை கடுமையாக விமர்சிக்கிறார் வேலைக்காரி நாடகம் வீட்டுக்குள் மறைந்திருக்கும் சமூக அநீதிகளை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் பெண்ணிய சிந்தனையின் முக்கிய படைப்பாக திகழ்கிறது. வேலைக்காரி நாடகத்தில் வரும் பெண் பாத்திரங்கள் வெறும் இரங்கலுக்குரியவர்களாக இல்லாமல் சிந்திக்கும், எதிர்க்கும் கேள்வி கேட்கும் மனிதர்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. வேலைக்காரி பெண் அனுபவிக்கும் அவமதிப்பு, உழைப்பு சுருண்டல் பாலியல் அடக்கு முறை ஆகியவை அவளது உரையாடல்களின் மூலம் வெளிப்படுகின்றன. நான் வேலைக்காரி என்பதால் மனித மரியாதை இல்லையா? என்ற கேள்வி பெண்ணியத்தின் அடிப்படை தத்துவமான சம உரிமையை வலியுறுத்துகிறது. அண்ணாவின் பெண்ணிய பார்வை வர்க்க சிந்தனையுடன் இணைந்ததாக உள்ளது.

பெண் என்ற அடையாளத்துடன் சேர்ந்து ஏழ்மை, சமூக நிலை ஆகியவை அவளின் ஒடுக்குமுறையை அதிகரிக்கின்றன என்பதை நாடகம் தெளிவாகக் காட்டுகிறது. இதன் மூலம், பெண்களின் பிரச்சினைகளை பாலினக் கோணத்தில் மட்டும் அல்லாமல், சமூக-பொருளாதாரச் சூழலோடும் இணைத்துப் பார்க்க வேண்டிய அவசியத்தை அண்ணா வலியுறுத்துகிறார். இது வேலைக்காரி நாடகத்தின் பெண்ணியத்தின் முக்கிய வலிமையாகும்.

ஆனால் திறனாய்வு நோக்கில் பார்க்கும் போது சில வரம்புகளும் காணப்படுகின்றன. வேலைக்காரி நாடகத்தில் பெண்ணியச் சிந்தனைகள் பெரும்பாலும் சமூக சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாகவே முன்வைக்கப்படுகின்றன; பெண்ணின் தனித்துவமான சுய அடையாளம், உடல்-மன உரிமைகள் போன்ற அம்சங்கள் ஆழமாக விரிவடையவில்லை. பெண் விடுதலை, பெரும்பாலும் சமத்துவ சமூகத்தின் ஒரு துணை நோக்கமாகவே சித்தரிக்கப்படுகிறது. இதனால், இந்நாடகத்தின் பெண்ணியம் முழுமையான பெண்ணியக் கோட்பாடாக அல்லாமல், சீர்திருத்தவாத பெண்ணியமாக நிலைபெறுகிறது.

முடிவாக, அண்ணாவின் வேலைக்காரி நாடகம் பேசும் பெண்ணியம், அடித்தளப் பெண்களின் குரலை சமூக மேடைக்கு கொண்டு வந்த ஒரு முன்னோடி முயற்சியாகும். வர்க்க ஒடுக்குமுறையுடன் இணைந்த பெண்ணியச் சிந்தனைகளை மக்கள் புரியும் மொழியில் வெளிப்படுத்தியதில் இந்நாடகம் முக்கிய பங்காற்றியுள்ளது. அதே நேரத்தில், பெண்ணியத்தை இன்னும் ஆழமாகவும் தனித்துவமாகவும் அணுகியிருக்கலாம் என்ற விமர்சனத்துக்கும் இடமளிக்கிறது. இருப்பினும், தமிழ் சமூகத்தில் பெண்ணிய விழிப்புணர்வை உருவாக்கிய முக்கிய நாடகமாக வேலைக்காரி திகழ்கிறது.

## துணை நூல் பட்டியல்


1. டாக்டர் சி.என். அண்ணாதுரை- வேலைக்காரி சென்னை-1
2. கிளாரா ஜெட்கின் - மகளிர் விடுதலை இயக்கங்கள்.
3. ஆ. சந்திரகாந்தா முருகானந்தம் - விடுதலை தேடும் புதுயுகப் பெண்கள்
4. மாரியம்மாள் - நவீன தமிழ் ஆங்கில புதினங்களில் பெண்ணியம்
5. எம்.ஏ. சுசிலா- தலித்தியக்கத்தில் பெண்ணியமும் தலித்தியமும்